بسم الله الرحمن الرحيم

எல்லாப் புகழும் புகழ்ச்சியும் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் உத்தம நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களது உற்றார் உறவினர்கள், நற்றவத்தோழர்கள், நல்லடியார்கள், அவ்லியாக்கள், நம் அனைவர் மீதும் என்றென்றும் நிலவட்டுமாக. ஆமீன்.

ஒரு சமூகத்தின் நிலையான அபிவிருத்திக்கும் முன்னேற்றித்திற்கும் கல்வியே அடிப்படையானது என்பதை புடம்போட்டுக் காட்டிய ஒரே மார்க்கம் இஸ்லாம் என்றால் அது மிகையாகாது. ஓதுவீராக! படிப்பீராக! என்றே இறைவனது முதலாவது திரு வசனம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்பட்டது. அன்று முதல் நபிகள் நாயகத்தின் இறுதி நொடிவரை கல்வியை கற்பதிலும் கற்பிப்பதிலும் அதற்கு உதவி ஒத்தாசை புரிவதிலுமே தங்களது வாழ்நாளை அர்ப்பணித்து அதில் வெற்றியும் கண்டார்கள். மது, மாது, கொலை, கொள்ளை, களவு போன்ற பஞ்சமாபாதகங்களில் ஊறித்திளைத்திருந்த அறியாமை சமூகத்தை பார்போற்றும் நிகரில்லா நெறிகொண்ட அறிவார்ந்த சமூகமாக மாற்றிய பெருமை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே சாரும். ‘திண்ணைத்தோழர்கள்‘ என்றும் ‘குத்தாபுல் வஹி’ என்றும் ‘ஹாபிழ்கள்’ என்றும் வெவ்வேறு கட்டமைப்புகளில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவூட்டியமை தற்கால கல்விக்கூட கல்விமுறைக்கோர் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றது. கல்வியையும் ஞானத்தையும் தேடிப்படிக்கவேண்டுமென்றும் கல்விமான்களை கௌரவம்செய்து அவர்களது போதனைகளை ஏற்றுநடக்கவேண்டுமென்றும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பது அவர்கள் கல்விக்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தை பறைசாற்றுகின்றது.

كن عالماً، أو متعلماً، أو مستمعاً، أو محباً ولا تكن الخامسة فتهلك (الطبراني)

“நீ ஓர் ஆலிமாக (கற்றவனாக) இரு அல்லது இல்மைத்தேடும் மாணவனாக இரு அல்லது இல்மை செவிமடுப்பவனாக இரு அல்லது ஆலிம்களையும் இல்மைத்தேடும் மாணவர்களையும் நேசிப்பவனாக இரு ஆனால் மேற்சொன்ன நான்கு நிலைகளில் ஏதேனும் ஒன்றிலன்றி ஐந்தாம் நபராக இருந்திடாதே; நீ அழிந்துவிடுவாய்” (துப்ரானி) என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதில் பல்வேறு அர்த்தங்கள் மறைந்திருக்கின்றன.

இவ்வுலக வாழ்க்கையில் ஒரு மனிதன் எல்லாக்கட்டங்களிலும் மேற்சொன்ன நான்கு நிலைகளையும் அல்லது ஏதேனும் ஒரு நிலையிலேனும் தொடர்ச்சியாக இருந்தாக வேண்டும். இல்லையேல் தடுக்கப்பட்ட ஐந்தாம் நிலையை அடையநேரிடும். இறைத்துதர் எச்சரித்த ஐந்தாம் நிலையை அடையாதிருக்க அவன் ஏதோ ஒரு வகையில் கல்வியுடன் தொடர்புடையவனாகவே இருந்தாக வேண்டும் என்பதையும் இது உணர்த்துகின்றது. அது மாத்திரமன்றி ஹதீதில் குறிப்பிடப்பட்ட முதல் நான்கு நிலைகளும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவையாகும். ஆலிமாக இருக்கவேண்டும் எனில் அவன் கற்கவேண்டும் இங்கு அவன் இல்மைத் தேடுபவனாக ஆகின்றான். கற்கவேண்டுமாயின் ஆலிம்களின் உபதேசத்தைக் கேட்கவேண்டும் இங்கு அவன் மூன்றாம் நிலையை அடைகின்றான். அதனை பொறுமையுடனும் ஆர்வத்துடனும் செவிமடுக்க அறிவாளிகளையும் அறிவையும் அவன் நேசிக்கவேண்டும். இங்கு அவன் நான்காம் நிலையை அடைகின்றான். எனவேதான் நாம் அனைவரும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய முதல் நிலையை அடைய முயற்சிக்கவேண்டும் அல்லது குறைந்த பட்சம் இல்மையும், ஆலிம்களையும், இல்மை கற்போரையும் நேசிப்பவர்களாகவாவது இருந்து இவ்வுலகில் இல்மையையும் அதன் மகிமையையும் மேலோங்கச்செய்யவேண்டும்.

ஆகையால்தான், வரலாற்றிலே புனித இஸ்லாத்துக்காக உழைத்து அதற்காகவே தங்களது வாழ்வை தியாகம் செய்த உத்தமர்களான ஸஹாபாக்கள், தாபிஈன்கள், வலிமார்கள், சூபியாக்கள், இமாம்கள் அனைவரும் பிற்கால சந்ததியினரின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் கல்விக்கான வாசல்களைத் திறந்துவிட்டார்கள். இவர்கள் இறைக்கல்விக்கு ஆற்றிய சேவையினாலேயே, பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் சூபித்துவ வழியில் அமைந்த உண்மையான இறைக்கல்வி இன்றும் உயிர்வாழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் எங்களது செய்கு நாயகம் அதிசங்கைக்குரிய எமது ஷைகுனா ஆஷிகுர் ரஸூல், அஷ்ஷெய்குல் காமில், அல் வலிய்யுல் பாழில், குத்புஸ் ஸமான் அஸ் ஸெய்யித் ஷெய்க் கோயாத் தங்கள் அல் காதிரிய்யி வர்ரிபாஇய்யி (தங்கள் வாப்பா – கத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அஸீஸ்) அவர்கள் தரீக்காக்களின் வளர்ச்சிக்கும் சூபித்துவ ஞானத்துக்கும் அரும்பணியாற்றியுள்ளார்கள். இலங்கையின் பல்வேறு பகுதிகளில் அவர்களால் நடாத்தப்பட்டு வந்த வாராந்த, மாதாந்த ராதீப் மஜ்லிஸுகளை தொடர்ந்து அவர்கள் ஆற்றிய மார்க்கச் சொற்பொழிவுகளில் பல்வேறு ஆன்மீகக் கருத்துக்களையும் அறிவு ஞானத்தையும் மக்களுக்கு புகட்டினார்கள். மாத்திரமல்லாது,


இறை ஞானக்கல்வியையும் சூபித்துவக் கல்வியையும் புகட்ட அரபு மத்ரஸாக்களையும் இஸ்லாமிய நூலகங்களையும் நிறுவினார்கள். தெஹிவளையில் அவர்கள் நிறுவிய கல்விக்கூடத்தில் பாரியதோர் நூலகத்தையும் அமைத்து அதனை அல்ஜாமிஅதுல் கௌஸிய்யா மற்றும் இஸ்லாமிய நூலகம் என்ற பெயரிலேயே ஆரம்பித்தும்வைத்தார்கள்.

எனவே எமது செய்கு நாயகம் காட்டித்தந்த ஞான வழிமுறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளைப் பின்பற்றி கற்பவர்களாக, கற்பிப்பவர்களாக, கல்வியை போதிப்பவர்களாக அல்லது கல்வியையும் கல்விமான்களையும் நேசிப்பவர்களாக வாழ நம் அனைவருக்கும் வல்ல நாயன் அருள்புரிவானாக.

ஆமீன்.

ஆக்கம்: அஸ்ஸெய்யித் ஹஸன் (பூக்கோயாத் தங்கள்)






All praise is for Allah ﷻ the Glorified and the Exalted, and may He ﷻ shower His choicest peace and blessings in perpetuity on His most beloved of all creations, Sayyidina wa Nabiyyina wa Habibina wa Mawlana Muhammad ibn 'Abdillah, Nurin min Nurillah, Sallallahu 'alayhi wa 'alaa aalihi wa sahbihi wa Sallim, the pious and righteous persons and all those who follow them in righteousness till the Day of Judgment. Aamin.

With knowledge, one will be able to differentiate between truth and falsehood, right and wrong. Allah ﷻ says in this regard, "and those who have been given knowledge see that what is revealed to you from your Lord is the truth, and it guides to the path of the Exalted in Might, the Praiseworthy."

The first word of the Quran revealed was: Read ('Iqra')
Education, study and research are all held in high esteem in Islam. If anyone travels on a road in search of knowledge, Allah ﷻ will cause him to travel on one of the roads of Paradise. The angels will lower their wings in their great pleasure with one who seeks knowledge, the inhabitants of the heavens and the earth and the fish in the deep waters will ask forgiveness for the learned man.

When people were in the state of ignorance and immortality, worshipping idols and eating the flesh of dead animals, committing all sorts of abomination and shameful deeds, Allah ﷻ sent His Prophet Muhammad Sallallahu 'alayhi wa 'aalihi wa Sallim , one of their own people whose lineage, truthfulness, trustworthiness and integrity were well known to them. Sallallahu 'alayhi wa 'aalihi wa Sallim, called them to worship Allah ﷻ alone and to renounce the stones and the idols which they and their ancestors used to worship beside Allah ﷻ. He ﷺ. taught them to speak the truth, to honor their promises, to be kind to their neighbors, to cease all forbidden acts, to abstain from bloodshed, to avoid obscenities and false wittiness for which He ﷺ was persecuted as no one has ever been persecuted before or after.

It was indeed one of the greatest miracles of our beloved Prophet Muhammad Sallallahu 'alayhi wa 'aalih wa Sallim, that He ﷺ changed people's hearts and won over people to the True Faith to such an extent that those who were His ﷺ bitterest enemies became His ﷺ greatest friends, adopted His ﷺ faith and His ﷺ life-style ( Sunnah ) and they were prepared to lay down their lives at His ﷺ command.

**كن عالماً، أو متعلماً، أو مستمعاً، أو محباً ولا تكن الخامسة فتهلك (الطبراني)**

Be a scholar, learner, listener, or lover, and don't be the fifth which makes you perish . ( At-Tabarani )

This means that whoever abandons any of the first four praiseworthy categories necessarily enters a fifth and is thus ruined. He is neither a scholar, a student, a Listener, nor one who loves scholars. He is therefore ruined. Whoever hates scholars, he loves their ruin. One who loves their ruin, loves for the light of Allah ﷻ to be extinguished on earth and for sin and corruption to appear. This is consistent with what the righteous Salaf have said, and loving the scholars is an act of worship.

Seeking knowledge is obligatory upon every muslim. ... and widely corroborated. Allah ﷻ elevates in degrees those who believe and those possessing knowledge

Prophet Muhammad Sallallahu 'alayhi wa 'aalihi wa Sallim had said , gaining little knowledge is better than abundant worship and a scholar is seventy degrees more virtuous than the devout worshipper and attaining religious knowledge is more beloved to me than standing the entire night in Prayer and "Convey (my teachings) to the people even if it were a single sentence…" [Bukhari].

Based on this Our beloved Prophet Muhammad Sallallahu 'alayhi wa 'aalihi wa Sallim's companions, their successors and the successors of the successors, the pious people and the scholars had to make tremendous sacrifices for the sake of Islam to convey the message of ﷺ to the Mankind.

Verily acquiring knowledge of the deen Sufism / Tasawwuf [ التَّصَوُّف ] would allow us to understand the benefits of our actions and what actions of ours are pleasing or displeasing to Allah ﷻ and motivate us to increase our good deeds.

Following the footsteps of Our beloved Prophet Muhammad Sallallahu 'alayhi wa 'aalihi wa Sallim, our Sheikh His Holiness As Seyyid Sheikh Koya Thangal [ Sheikhul Kaamil ] Thangal Waappa [ قدس الله سره العَزيز ] *Al Qadhiriyyi War- Rifayiyyi * sacrificed almost His entire life in Sri Lanka in order to carry out their ancestors wish and guideline. And in anticipation of teaching the Sufism /Tasawwuf [ التَّصَوُّف ] His Holiness organized Raathib programs weekly and monthly which are being conducted even to date. AL- Jamiathul Ghawsiyyah, the Madrasa and the Islamic library which His Holiness organized is a landmark for Sufism in Sri Lanka .

Gaining knowledge about the religion means we are able to understand a little bit about the greatness, attributes of Allah ﷻ. May Allah ﷻ bestow upon all of us His endless blessings to follow the teachings of our Sheikh His Holiness As Seyyid Sheikh Koya Thangal [ قدس الله سره العزيز ] and to be amongst the scholars, learners, listeners and lovers of knowledge and purify our hearts with Love for Allah ﷻ alone and to live our lives according to the soaring manners taught to us by our Holiness . Aamin.

By As Seyyid Hassan PooKoya Thangal